செ.வெ.எண்: 98 /2021 நாள் : 27.02.2021

**நடைபெறவுள்ள பாராளுமன்ற இடைத்தேர்தல் - 2021 மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 நடத்தை விதிமுறைகள் குறித்து, மண்டல அலுவலர்கள், பறக்கும் படை, கண்காணிப்பு படையினர் ஆகியோருடனான ஆலோசனைக்கூட்டம், கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு. மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

கன்னியாகுமரி மாவட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் பாராளுமன்ற இடைத்தேர்தல் - 2021 மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 நடத்தை விதிமுறைகள் குறித்து, கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மண்டல அலுவலர்கள், பறக்கும்படை, கண்காணிப்பு படையினர் ஆகியோருடனான ஆலோசனைக்கூட்டம் இன்று (27.02.2021) நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டம் 6 சட்டமன்ற தொகுதிகள் சேர்ந்து ஒரு பாராளுமன்ற தொகுதியாக உள்ளது. மேலும், ஆறு சட்டமன்ற தொகுதிக்கும் சேர்த்து, 7,82,936 ஆண் வாக்காளர்களும், 7,84,488 பெண் வாக்காளர்களும், 203 இதரர் வாக்காளர்களும், என மொத்தம் 15,67,627 வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். இதில், ஆறு சட்டமன்ற தொகுதிகளிலும் சேர்த்து, புதிதாக 54,518 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். நமது மாவட்டத்தில் 2,243 வாக்குப்பதிவு மையங்கள் உள்ளது. இந்த மையங்களில் சாய்தளம் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்படும்.

நமது பாராளுமன்ற இடைத்தேர்தல் - 2021 மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 -க்கு 20 பொறுப்பு அலுவலர்கள் (Nodal Officers) நியமிக்கப்பட்டுள்ளார்கள். 6 சட்டமன்ற தொகுதிக்கும் சேர்த்து 137 மண்டல அலுவலர்கள் (Zonal Officers) கண்காணிப்பில் ஈடுபடுவார்கள். ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் 3 பறக்கும் படை(Flying Squad) குழுக்கள் வீதம் 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு 18 குழுக்களும், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கு 3 கண்காணிப்பு படை(Static Surveillance Team) குழுக்கள் வீதம் 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு 18 குழுக்களும், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் 1 Video Viewing Team வீதம் 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு 6 குழுக்களும், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் 1 Accounting Team குழுக்கள் வீதம் 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு 6 குழுக்களும், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் 1 Video Surveillance Team குழுக்கள் வீதம் 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு 6 குழுக்களும் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்படுகிறது.

மேலும், பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சியினர் உரிய அனுமதி பெற்று விழாக்கள் நடத்த வேண்டும். பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையிலும் எவ்வித Flex மற்றும் Banners வைக்ககூடாது. தேர்தல் விதிமீறல்கள் குறித்த புகார்களை 1950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். மேலும், தேர்தல் விதிமீறல்கள் ஏதேனும் இருந்தால், பொதுமக்கள் cVIGIL செயலியை பயன்படுத்தி விதிமீறல்கள் குறித்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பதிவிடலாம். இந்த செயலி மூலம் ஒருவர் எத்தனை புகார்கள் வேண்டுமானாலும் தெரிவிக்கலாம். புகார்கள் பதிவு செய்யும் வாக்காளர்களின் சுய தகவல்கள் ரகசியாக வைக்கப்பட்டிருக்கும் என கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், தேர்தல் பொறுப்பு அலுவலரும், மாவட்ட வருவாய் அலுவலருமான திருமதி.இரா.ரேவதி, பத்மநாமபுரம் சார் ஆட்சியர் திரு.எம்.சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.மா.வீராசாமி, உதவி ஆணையர் (ஆயம்) திரு.சங்கரலிங்கம், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.சு.சொர்ணராஜ், நாகர்கோவில் கோட்டாட்சியர் திருமதி.அ.மயில் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.